**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திற்கான தொடர்பாடல் கருவிகளை தயாரிப்பதற்காக அதிகாரசபைக்கும் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 8,676,039 முற்பணம் நிதிக்கூற்றுக்களில் முற்பணமொன்றாக காட்டப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் மிகை ரூபா 8,676,039 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் உரிய பணிகள் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை, 2019 ஆம் ஆண்டிற்காக நிறைவேற்றப்பட்ட வாக்குப் பண கணக்கின் கீழ் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீண்டும் நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் 2018.12.31 இல் உள்ளவாறு காசுப் புத்தகம் தீர்ப்பனவு செய்யப்பட்டு மிகுதி பணம் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் ரூபா 8,676,039.00 தொகை செலவினமொன்றாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டியிருந்தது. அதிகாரசபைக்கு வழங்கப்பட வேண்டிய உற்பத்திகள் குறிப்புரைகளிற்கிணங்கவும் உரிய திருத்தங்களிற்குட்பட்டு சரியான தொகைகளிலும் பெறப்பட்டிருந்ததெனும் பரிந்துரைகளின் அடிப்படையில் முகாமைத்துவமானது செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு உரிய காசோலையை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க குறிப்புரைகள் மற்றும் உடன்படிக்கைகளிற்கு இணங்க அதிகாரசபைக்கு வீடியோ மற்றும் ஓடியோ ரேப்களை (tapes) கையளிப்பதற்காக 2019.05.24 இல் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் பதாகைகளின் (posters) இறுதி இருப்பு 2019.06.06 இல் அதிகாரசபையால் பெறப்பட்டிருந்தன. இதனால் ரூபா 6,073,227.33 பெறுமதியான 664292 ஆம் இலக்க காசோலை இரத்துச் செய்யப்பட்டு 10 சதவீத பிடித்துவைத்தல் பணத்திற்குரிய காசோலையை மீள வழங்குவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 நவம்பர் 28 இல் அதிகாரசபைக்கும் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட வேலைகள் மற்றும் சேவைகள் உடன்படிக்கையின் 05 ஆம் பிரிவு | பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - 2018 தொடர்பான அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திற்காக தொடர்பாடல் கருவிகளை தயாரிப்பது தொடர்பான புதிய உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை . பதிலாக ரூபா 8,676,039 தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. | 2019 சனவரி – ஏப்ரல் காலப்பகுதிக்காக நிறைவேற்றப்பட்ட வாக்குப் பணக் கணக்கின் காரணமாக நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் உப கட்டுநிதிகளாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (யூஎன்டிபி) வரிசை அமைச்சால் 2018 ஆம் ஆண்டிற்காக கட்டுநிதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. இதனால் காசுப் புத்தக மீதி அடுத்த ஆண்டிற்கு முன்கொண்டுவரப்பட முடியாதிருந்ததுடன் 2019 சனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக நிறைவேற்றப்பட்ட வாக்குப் பணக் கணக்கு காரணமாக அந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட முடியாதிருந்ததென திறைசேரி அறிவித்திருந்ததன் அடிப்படையில் அந் நிகழ்ச்சித்திட்டங்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் சிக்கல்களுக்குரியதாக இருந்தது. எனினும் ஆரம்ப பெறுகைகள் பூர்த்தியடைந்த பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் செலசினேயுடன் வேலை செய்தல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் 30 சதவீத முற்பணத்தை செலுத்துவதற்கும் 70 சதவீத மிகுதிக் கொடுப்பனவிற்காக காசோலையொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் அதிகாரசபையால் உற்பத்திகள் குறிப்புரைகளிற்கிணங்கவும் உரிய திருத்தங்களிற்குட்பட்டு | வேலைகள் மற்றும் சேவைகள் உடன்படிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

சரியான தொகைகளிலும் பெறப்பட்டிருந்ததெனும் பரிந்துரைகளின் அடிப்படையில் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அக் காசோலையை வழங்குவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க குறிப்புரைகளின் பிரகாரம் அதிகாரசபைக்கு வீடியோ மற்றும் ஓடியோ ரேப்களை கையளிப்பதற்கு 2019.05.24 இல் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் பதாதைகளின் இறுதி இருப்பும் 2019.06.06 இல் அதிகாரசபையால் பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 6,073,227.33 பெறுமதியான 664292 ஆம் இலக்க காசோலை இரத்துச் செய்யப்பட்டு 10 சதவீத பிடித்துவைத்தல் பணத்திற்குரிய காசோலையை மீள வழங்குவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 487,801 மிகையொன்றாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்காக மிகையொன்றோ அல்லது பற்றாக்குறையொன்றோ காணப்படவில்லை (2017 ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதி). நிதி விளைவுகளில் ஏற்பட்ட ரூபா 487,801 தொகையான மிகையொன்றிற்கு ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான அதிகாரசபையின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவிற்கு பொதுமக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களால் அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 86 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது 23 முறைப்பாடுகள் அதிகாரசபையால் புலனாய்வுசெய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த அதே நேரம் 38 முறைப்பாடுகள் புலனாய்வு செய்யப்பட்டு வந்தன. 19 முறைப்பாடுகள் மூடப்பட்டு அல்லது ஏனைய நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டு இருந்தன. 5 முறைப்பாடுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததுடன் 04 முறைப்பாடுகள் தனியாக வைக்கப்பட்டிருந்தன. அதிகாரசபை பாதுகாப்பு பிரிவை அல்லது உதவி பிரிவை ஸ்தாபித்திருக்கவில்லை. ஆகையால் அதிகாரசபையால் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 30 முறைப்பாடுகள் அல்லது 35 சதவீதம் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பு பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக அதிகாரசபையால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகளிற்குரிய கணக்காய்வு அவதானிப்பின் பரிந்துரையாக அதிகாரசபையின் பாதுகாப்பு மற்றும் உதவிப் பிரிவுகள் உடனடியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பது உள்ளது. எனினும் அப் பிரிவுகளின் பணிப்பாளர்களிற்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததால் அப் பிரிவுகளிற்கு பணிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் தாமதமாகியிருந்தது. | அதிகாரசபையின் பாதுகாப்பு மற்றும் உதவிப் பிரிவுகள் உடனடியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) நீதி அமைச்சிற்கு சொந்தமான தற்போது அதிகாரசபை குடியிருக்கும் கட்டிடம் மற்றும் அதன் மின்சார மற்றும் தண்ணீர் செலவினங்கள் நீதி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதிகாரசபைக்கு முறையாக கையளிக்கப்பட்டிருக்காத | அதிகாரசபை குடியிருக்கும் கட்டிடம் தற்போது நீதி அமைச்சிற்கு சொந்தமாக உள்ள போதிலும் 2016 சனவரி 08 இல் 428/11 ஏ, முதலாம் மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, | உறுதிப்படுத்தலொன்று உடனடியாக பெறப்பட வேண்டியதுடன் இச் சிக்கல் முறையாக தீர்க்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கட்டிடத்தின் உள்ளக பாகப் பிரிவினை தொடர்பாக ரூபா 1,991,278 தொகையை அதிகாரசபை செலவிட்டிருந்தது. அம் மூலதன செலவினம் தொடர்பாக நன்மைகளை பெற்றுக்கொள்ளும் சாத்தியத்தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பத்தரமுல்லை எனும் முகவரியில் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததென முன்னாள் கௌரவ நிதி அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆகியோரால் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பில் உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (யூஎன்டிபி) கீழ் அதிகாரசபையால் பெறப்பட்ட ரூபா 410,363 பெறுமதியான நிழற்படப் பிரதி இயந்திரம் மற்றும் பிறிண்டர் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தன. | பணிப்பாளர் (உதவி மற்றும் பாதுகாப்பு) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பல சந்தர்ப்பங்களில் நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் காணப்படாததன் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் எதுவும் செய்யப்பட முடியாதிருந்தன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (யூஎன்டிபி) கீழ் அப் பதவிக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் தேவைப்பாட்டுடன் சேர்த்து உரிய ஐசீரீ உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாடு தொடர்பாக யூஎன்டிபிக்கு அறிவித்திருந்ததால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தால் (யூஎன்டிபி) 07 நிழற்பட பிரதி இயந்திரங்கள் மற்றும் 07 பிறிண்டர்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் தற்காலத்தில் பணிப்பாளர் (உதவிச் சேவைகள்) மற்றும் பணிப்பாளர் (பாதுகாப்பு) ஆகிய இரண்டு தனித்தனியான பதவிகளாக அப் பதவிகளை உருவாக்குவதற்கு 2019.02.14 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அப் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் உள்ளபடியான தேவைப்பாடு இனங்காணப்பட வேண்டியதால் அதற்கிணங்க வேண்டுகோள்கள் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதவிகளிற்காக ஆட்சேர்ப்புத் திட்டமொன்று காணப்படாதமை தொடர்பாக 2019.05.13 இல் அத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க எதிர்காலத்தில் உடனடியாக அப் பதவிகளிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 05 வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டத்திலிருந்து விலகி ரூபா 540,000 பெறுமதியில் 06 வளிப்பதனாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னொரு வளிப்பதனாக்கியை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பெறுகை திட்டத்தை தயாரித்த போது ஒரு வளிப்பதனாக்கி ரூபா 310,000 ஆக இருக்க வேண்டுமென மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூறுவிலைகள் கோரப்பட்ட போது அனைத்து நிறுவனங்களும் ரூபா 100,000 இற்கு குறைவான விலைமனுக்களை சமர்ப்பித்திருந்தன. இதனால் அதிகாரசபை அதிகளவில் யதார்த்தமற்ற மதிப்பீடுகளை தயாரித்திருந்தமையால் பாதீட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்த தவறியிருந்தது. வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்யும் போது குறிப்புரைகள் முறையாக தயாரிக்கப்படாததன் காரணமாக கொள்வனவுக் | மீளாய்வாண்டிற்காக 05 வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவனம்சார் பதவியணியினரில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் அலுவலக இடவசதி பாகப்பிரிவினையிடப்பட்டமை காரணமாக வளிப்பதனாக்கிகளின் தேவைப்பாடு மாற்றமடைந்திருந்தது. ஆகையால் 06 உடன் சேர்த்து ஒரு மேலதிக வளிப்பதனாக்கியை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு அதிகரித்திருந்தது.<br><br>2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தை தயாரிக்கும் போது வளிப்பதனாக்கியொன்று ரூபா 310,000 தொகையில் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒரு வளிப்பதனாக்கிக்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 100,000 ஐ விட குறைவாக இருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. அதிகாரசபை பொறியியல் அறிவைக் கொண்ட உத்தியோகத்தர்களை கொண்டிருக்காததால் வளிப்பதனாக்கி ஒன்றிற்கான விலையை குறித்துரைப்பது சாத்தியமற்றிருந்தது. இதனால் யதார்த்தமற்ற மதிப்பீட்டிற்கு வழிவகுத்துள்ளது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்த பின்னர் பொருத்தமான தொழில்நுட்ப அறிவை | செயல்நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கிகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தை தயாரிக்கும் போது நிறுவனத்தின் தேவைப்பாடுகள் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டு அதற்கிணங்க திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பெறுகை செயன்முறைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றிடமிருந்து குறிப்புரைகள் தொடர்பான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பின்னர் கூறுவிலைகள் கோரப்பட வேண்டும். மதிப்பீடுகள் யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிரயத்திற்கு புறம்பாக நிறுவுவதற்காக ரூபா 105,050 மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | உட்செலுத்துவதன் காரணமாக செலவினம் சரியான கணிப்பீடுகளுடன் குறைக்கப்பட்டிருந்தன. மதிப்பீடு செய்யப்பட்ட ஒன்றை விடக் குறைவான தொகை செலவிடப்பட்டிருந்ததால் அதிகாரசபையில் நட்டமெதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்வதற்காக குறிப்புரைகளை தயாரிக்கும் போது நிறுவுதல் கட்டணங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் நிறுவும் சமயத்தில் மேலதிகமாக மின்சாரம் வழங்கப்பட வேண்டியிருந்தது. இதனால் வளிப்பதனாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்ட அதே நிறுவனத்திடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டு உரிய சேவை பெறப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட வளிப்பதனாக்கிகள் நிறுவப்பட வேண்டியிருந்ததுடன் நிறுவுவதற்காக அதே நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 54 ஆக காணப்பட்ட போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையில் 31 பதவிகள் காணப்பட்டன. அதிகாரசபையில் உள்ள முக்கியமான 23 பதவிகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தற்போதும் வெற்றிடமாக காணப்படுகின்றன. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 23 வெற்றிடங்களுடன் உள்ளபடியான பதவியணியினர் 31 ஆக காணப்பட்டன. தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆக காணப்படுவதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தற்போது உள்ளபடியான பதவியணியினர் 34 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆகவும் காணப்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வாளர் | அதிகாரசபையின் நோக்கங்களிற்குரிய பணிகளை ஆற்றும் போது முக்கியமான பதவிகள் வெற்றிடமாக காணப்படுதல் நிறுவனத்தின் சீரான செயற்பாடு மீது நேரடியாக பாதிப்பை ஏற்படுத்துவதால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மற்றும் சட்ட உத்தியோகத்தர் ஆகிய இரண்டு பதவிகள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருந்ததுடன் தகவல் உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2019 யூன் 17 மற்றும் 18 இல் நேர்முகப்பரீட்சைகளை நடாத்துவதற்காக பட்டியலிடப்பட்டிருந்தன. மேலும் புலனாய்வு உத்தியோகத்தர், தொடர்பாடல் உத்தியோகத்தர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளிற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2019 மே 26 இல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

- ✓ 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டை அங்கீகரிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் தாமதமாகியிருந்தன.

- ✓ நிலவுகின்ற நிச்சயமற்ற அரசியல் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட வேண்டியிருந்தன.

- ✓ மேற்பார்வை மட்டப் பதவிகள் வெற்றிடமாக உள்ள போது ஏனைய ஊழியர்களின் ஆட்சேர்ப்புடன் கடமைப் பொறுப்புக்களை ஒதுக்குவதில் பிரச்சனைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுதல்.